# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2010 - 2011

## தமிழ்மொழி - ஆண்டு 6

சுட்டெண்:........................................................ நேரம்: 150 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. சுட்டாலும் வெண்மை தருவது.
   அ) சிப்பி ஆ) சங்கு இ) முத்து ஈ) சோகி

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. திணை எத்தனைவகைப்படும்?
   அ) நான்கு ஆ) இரண்டு இ) மூன்று ஈ) ஏழு

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தமிழர், வாழ்வில் எதை அடிப்படையாகக் கொண்டு சிறப்புப் பெற்றனர்?
   அ) அறச்செயல்களை ஆ) அரச்செயல்களை
   இ) கொடுஞ்செயல்களை ஈ) அறாச்செயல்களை

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. அறமிது மறமிது என்று அறிய கற்கவேண்டிய நூல்
   அ) திருக்குறள் ஆ) மூதுரை இ) சிலப்பதிகாரம் ஈ) புறநானூறு

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. உயர்திணைக்குரிய பால்கள் எத்தனை வகைப்படும்?
   அ) ஆறு ஆ) இரண்டு இ) நான்கு ஈ) மூன்று

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. தமிழ்ப் புலவருக்கு தலையைக் கொடுக்கத் துணிந்த மன்னன்
   அ) இளங்குமணன் ஆ) அதியமான் இ) குமணன் ஈ) இரும்பொறை

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. ஒரு சொல்லியத்தில் கருத்துத் தொடங்கும் இடம்

அ) செயப்படுபொருள் ஆ) பயனிலை இ) அடைமொழி ஈ) எழுவாய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. ஆனைந்தில் அடங்காதது

அ) வெண்ணெய் ஆ) மண்ணெய் இ) நெய் ஈ) பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. இல்லம், உறையுள், மனை, அகம் இச்சொற்கள் குறித்து நிற்கும் ஒரு சொல்

அ) அழகு ஆ) களிப்பு இ) வடிவு ஈ) வீடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. தமிழரின் தலைசிறந்த பண்பாடுகளில் ஒன்று

அ) கொடை ஆ) சினம் இ) புகழ் ஈ) போர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. இதில் சரியான சொல்லியம்

அ) தங்கை வயிற்று வழியால் துடித்தாள். ஆ) தங்கை வயிற்று வலியால் துடித்தாள்

இ) தங்கை வய்ற்று வலியால் துடித்தாள். ஈ) தங்கை வயிற்று வளியால் துடித்தாள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. தமிழீழம் அமைந்துள்ள மாவாரி

அ) பசுபிக் ஆ) இந்து இ) அத்திலாந்திக் ஈ) வங்காள

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. மயிர் நீத்தால் உயிர் வாழா விலங்கு

அ) ஆமா ஆ) மான் இ) கவரிமா ஈ) தோட்டம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வன்னியை ஆண்டவன்

அ) பண்டாரவன்னியன் ஆ) காக்கைவன்னியன்

இ) சிதம்பரவன்னியன் ஈ) கயிலாயவன்னியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. சித்திரை முழுமதியின் எழுச்சியை

அ) கண்ணியா குமரியிலே ஆ) கண்னியா குமரியிலே

இ) கன்ணியா குமரியிலே ஈ) கன்னியா குமரியிலே

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. மாமன்னன் எல்லாளன் எத்தனை ஆண்டுகள் இலங்கையை ஆண்டான்.
அ) நாற்பது ஆ) ஐம்பது இ) நாற்பத்துநான்கு ஈ) முப்பத்து நான்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. துட்டகெமுனுவின் தந்தை
அ) காகவனதீசன் ஆ) கயிலைவணதீசன் இ) சூரதீசன் ஈ) தேவதீசன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. ஒருவரைக் குறிப்பது ஒருமை. பலரைக் குறிப்பது
அ) பன்மை ஆ) பண்மை இ) பன்மைய் ஈ) தன்மை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. சிறுதுளி பெரு
அ) வெள்லம்' ஆ) வெல்லம்' இ) வெள்ளம்' ஈ) வெழ்ழம்'

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. பால் சுவையில் குன்றாது
அ) கெட்டாலும் ஆ) நட்டாலும் இ) சுட்டாலும் ஈ) அட்டாலும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. படர்க்கைக்குரிய சொல்
அ) அவர்கள் ஆ) வந்தாய் இ) ஓடினேன் ஈ) பாடினோம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. சிங்கள நாடும் தமிழீழ நாடும் ஆங்கிலேயரால் ஒரு நாடாக இணைக்கப்பட்ட ஆண்டு
அ) 1848 ஆ) 1872 இ) 1858 ஈ) 1833

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. பொருட்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு
அ) யாழ்ப்பாணம் ஆ) பந்து இ) கோடை ஈ) சிவப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. மழை யார் பொருட்டு எல்லோர்க்கும் பெய்கிறது?
அ) நல்லோர் ஆ) உழவர் இ) மூத்தோர் ஈ) சிறியோர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. உள்ளத்தில் எழும் நல்வியல்புகளை இவ்வாறு அழைப்பர்.
அ) நன்றி ஆ) பண்பாடு இ) நற்குணம் ஈ) நாகரிகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. உழவுத்தொழில் செய்யும்போது பாடப்படும் பாட்டு
அ) ஏர்ப்பாட்டு ஆ) ஒப்பாரி இ) தாலாட்டு ஈ) கும்மி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. பாட்டியின் கை சொரசொர என இருந்தது. இதில் சொரசொர என்பது

அ) பெயர்ச்சொல் ஆ) சொல்லியம் இ) வினைச்சொல் ஈ) இரட்டைக்கிளவி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. ஆயுதமேந்திய தமிழீழப் போராட்டம் ஆரம்பித்த ஆண்டு

அ) 1972 ஆ) 1973 இ) 1983 ஈ) 1956

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. இலங்கைத்தீவு முழுவதையும் ஆங்கிலேயர் கைப்பற்றிய ஆண்டு

அ) 1831 ஆ) 1815 இ) 1800 ஈ) 1834

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. பேரன்,மகன்,மருமகன்,தம்பி,மருகன் இச்சொற்கூட்டத்தில் ஒரு பொருள் தரும் இரு சொற்கள்

அ) மகன் மருமகன் ஆ) பேரன் மகன் இ) மருமகன் மருகன் ஈ) மகன் தம்பி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. ஆண்டான் என்ற இறந்தகாலச் சொல்லை நிகழ்காலமாக்கினால்

அ) ஆளுவான் ஆ) ஆளவருவான் இ) ஆண்டனன் ஈ) ஆளுகிறான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழர் உலகின் முதல் மாந்தர் என்று ஆய்வாளர் கூறுகின்றனர். அவர்களே முதன் மொழியைப் படைத்தனர். எனவே, உலகின் முதன்மொழி தமிழாயிற்று. உலகநாகரிகம் தமிழரிடமிருந்தே தோன்றியது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்புகூட ஆசியாவின் பெரும்பகுதியை தமிழர்கள் ஆண்டனர். ஆனால், இன்று உலகில் தமிழருக்கென்று ஒரு நாடில்லை. இது எத்தகைய துயர் தரும் செய்தி! தமிழர் தம் தாயகத்தில் ஆட்சியாளர்களால் ஒடுக்கப்படுகின்றனர். தமிழருக்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன. தமிழர் இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்தப்படுகின்றனர். என்னை வாழவிடு என்று உரிமை கேட்டால் தமிழர் அழிக்கப்படுகின்றனர். எனவே, தமிழர் தம்முரிமை பெற்றுத் தலைநிமிர்ந்து வாழ வேண்டுமானால், ஓரணியில் திரள வேண்டும்.

1. உலகின் முதன் மொழி எது?

______________________________

______________________________

2. துயர் தரும் செய்தி எது?

______________________________

______________________________

3. தமிழர் எவ்வாறு நடத்தப்படுகின்றனர்?

______________________________

______________________________

4. தமிழர் ஓரணியில் ஏன் திரள வேண்டும்?

______________________________

______________________________

5. தமிழருக்கு மறுக்கப்படுவது என்ன?

______________________________

______________________________

(புள்ளிகள் 10)

## 3) தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுக்கு முழுவிடைதருக.

1.தமிழ் மக்களிடம் பறிக்கப்பட்ட உரிமைகள் எவை?

2. எல்லாளனது ஆட்சியில் நாடு எப்படி இருந்தது?

3. நாகரிகம், பண்பாடு இவற்றுக்கிடையே உள்ள வேறுபாடு என்ன?

4. ஆறறிவு படைத்த ஒருவர் எப்போது ஓரறிவு படைத்த மரத்திற்கு ஒப்பாகக் கருதப்படுகிறார்?

5. மூட ஆமை எனும் பாடம் தரும் அறிவுரை என்ன?

(புள்ளிகள் 15)

**4) கீழ்வரும் பாடலைப் படித்து, கொடுக்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு முழுவிடை தருக.**

***அச்சம் என்பது மடைமையடா***
***அஞ்சாமை தமிழர் உடைமையடா***
***ஆறிலும் சாவு நூறிலும் சாவு***
***தாயகம் காப்பது கடமையடா***

***வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி***
***மக்களின் மனதில் நிற்பவர் யார்***
***மாபெரும் வீரர் மானம் காப்போர்***
***வரலாறு தனிலே வாழ்கின்றார்***

1. தமிழர் உடைமை எது?

________________________________________

________________________________________

2. ஒருவனது கடமை என்ன?

________________________________________

________________________________________

3. வரலாற்றில் வாழ்கின்றவர் யாவர்?

________________________________________

________________________________________

4. எது மடைமை என்கிறார் கவிஞர்?

________________________________________

________________________________________

5. இப்பாடலில் இருந்து நீர் உணர்வது?

________________________________________

________________________________________

(புள்ளிகள் 05

## 5) இலக்கண/மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. தரப்பட்ட நிகழ்காலச் சொற்களை, இறந்தகாலத்திற்கும் எதிர்காலத்திற்கும் மாற்றியமைக்க:

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| | வெட்டுகின்றனர் | |
| | இழுக்கிறது | |
| | வரைகிறேன் | |
| | பாய்கின்றன | |

2. பெயர்ச்சொற்களின் வகைகளை எழுதுக.

____________________ ____________________

____________________ ____________________

____________________ ____________________

3. பின்வரும் சொற்களுக்குப் பொருள் தருக.

ஆழி: ____________________ அகம்: ____________________

பகலவன்: ____________________ சுத்தம்: ____________________

உவகை: ____________________ துயில்: ____________________

4. நாட்டுப்புற மக்கள் நாட்டார் பாடல்களைப் பாடுவர். இச்சொல்லியத்தில் இடம் பெற்றுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பனவற்றை விளக்குக

எழுவாய் : ____________________

பயனிலை: ____________________

செயப்படுபொருள் : ____________________

5. உயர்திணைக்குரிய பால்கள் எவை?

____________________

____________________

____________________

(புள்ளிகள் 15)

## 6) கீழுள்ள பந்தியை வாசித்து, அதனை உமது வாழிட மொழியில் மாற்றி எழுதுக.

நாம் ஒவ்வொரு நாளும் உடற்பயிற்சி செய்தல் வேண்டும். உடற்பயிற்சி செய்வதனால் உடல் உறுதி பெறுகிறது. நோய்கள் வராமல் தடுக்கின்றது. உடற்பயிற்சியினால் உள்ளமும் மகிழ்வடைகிறது. இது எங்கள் நலமான வாழ்விற்கு இன்றியமையாதது. நாள்தோறும் சிறிது தூரம் நடத்தல் ஒரு சிறந்த உடற்பயிற்சியாகும்.

(புள்ளிகள் 05

7) கீழ்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து, அதன் கீழுள்ள குறிப்புகளின் அடிப்படையில் நூறு சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.

1. மலைமீது ஒருநாள் ( வண்ணனைக் கட்டுரை)
2 எனது தாய்மண்
3. மாமன்னன் எல்லாளன்
4. தமிழர் பண்பாடு

(புள்ளிகள் 20)